# செங்கல்பட்டு மாவட்டம்,

## இரண்டாம் மதிப்பீட்டுத் தேர்வு - 2022

**பத்தாம் வகுப்பு    சமூக அறிவியல்    மதிப்பெண் - 100**

**பகுதி - அ. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 14

1. காதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்" எனக் கூறியவர் யார்?
**அ. லெனின்.**ஆ மார்க்ஸ் இ சன்யாட்சென் ஈ மாசேதுங்.

2 .மார்ன் போர் எதற்காக நினைவுகூறப்படுகிறது?
அ. ஆகாயப் போர்முறை
**ஆ.பதுங்குகுழி போர்முறை.**
இ.நீர்மூழ்கிகப்பல் போர்முறை
ஈ. கடற்படைப் போர் முறை.

3 .பன்னாட்டுச்சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர் எந்த நாட்டை சேர்ந்தவர்?
**அ.பிரிட்டன்** ஆபிரான்ஸ்
இ டச்சு ஈஅமெரிக்கஐக்கியநாடுகள்

4.மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி என அழைக்கப்படுகிறது.
அ. கடற்கரை **ஆ. தீபகற்பம்** இ. தீவு. ஈ.நீர் சக்தி

5..பாக்நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது.
அ. கோவா ஆ. மேற்கு வங்காளம் **இ. இலங்கை** ஈ. மாலத்தீவு

6.தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம்
அ.ஊட்டி **ஆ.ஆனைமுடி** இ.கொடைக்கானல் ஈ.ஜின்டா கடா

7.. பழைய வண்டல் படிவுகளால் உருவான மவெளி
அ. பாபர் ஆ. தராய் **இ. பாங்கர்.** ஈ ாதர்

8.கேரளா, கர்நாடக கடற்கரைப் பகுதி ளில் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு - - ---------- காற்றுகள் உதவுகின்றன
அ.லூ ஆ நார்வெஸ்டர்ஸ்
**இ.மாஞ்சாரல்.** ஈ ஜெட்காற்றோட்டம்

9..ஒரே அளவு மழை பெறும் இடங்களை இணைக்கும் கோடு-----
அ. சம வெப்பப் கோடுகள் **ஆ. சம மழை கோடுகள்**
இ. சம அழுத்த கோடுகள் ஈ. அட்சக்கோடுகள்

10.இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது.
**அ.ஒருமுறை** ஆ.இருமுறை
இ. மூன்று முறை ஈ. எப்பொழுதும் இல்லை

11..ஒரு வெளிநாட்டவர் கீழ்காணும் இதன் மூலம் இந்திய குடியுரிமை பெற முடியும்?
அ.வம்சாவளி ஆ.பதிவு
**இ.இயல்புரிமை** ஈ.மேற்கண்ட அனைத்தும்

12. கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதிநெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்?
அ. சட்டப்பிரிவு 352 **ஆ. சட்டப்பிரிவு 360**
இ சட்டப்பிரிவு 356 ஈ. சட்டப்பிரிவு 365

13.பணிகள்துறையில் நடப்புவிலை மொத்தமதிப்பு கூடுதல் 2018 - 19 இல் - - - - - - லட் ம் கோடி என கணக்கிடப்பட்டுள்ளது
அ. 91. 06 **ஆ. 92. 26** இ. 80.07. ஈ. 98. 29.

14.வேளாண் பண்டங்கள ன் உற்பத்தியில் இந்தியா - - - - அதிகமாக உற்பத்திய ளர் ஆகும்.
அ. 1.வது ஆ. 3. து இ. 4.வது. **ஈ. 2.வது.**

## பகுதி ஆ

**எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 28 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 10*2 = 20**

**15.மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக?**
1.இங்கிலாந்து, 2.பிரான்ஸ், 3. ரஷ்யா.

**16.பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களை பட்டியலிடுக?**
1. சர்வதேச சங்கம் முதல் உலகப் போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது.
2. சங்கத்திற்கு என்று இராணுவம் இல்லை என்பதால் "தான் எடுத்த முடிவுகளை" நடைமுறைப்படுத்த இயலவில்லை

**17.இந்தோ சீனாவில் நடைபெற்ற வெள்ளை பயங்கரம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன?**
1.இந்தோ சீனாவில் "வியட்நாம் தேசிய கட்சி "முக்கிய அரசியல் கட்சி ஆகும்.
2.1929 இல் வியட்நாம் வீரர்கள் ராணுவ புரட்சி செய்தனர்.
மிகப்பெரும் விவசாயிகள் புரட்சி நடைபெற்றது
புரட்சி ஒடுக்கப்பட்டதை.
தொடர்ந்து"வெள்ளைபயங்கரவாதம். அரங்கேறியது,
புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்

**18.ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கவும்?**
1.1932 ல் ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டில் இங்கிலாந்திற்கும், ஆங்கிலப் பேரரசின் உறுப்பு.நாடுகளுக்கும் "ஒப்பந்தங்கள்" கையெழுத்தானது
2.இம்மாநாட்டில் பங்கேற்ற நாடுகள், ஏனைய நாட்டு பொருட்களைக்காட்டிலும், இங்கிலாந்து பொருட்களுக்கு "

முன்னுரிமை வழங்க" ஒத்துக்கொண்டனர்.

19.**இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை கூறுக?**

1. மேற்கு பாகிஸ்தான்
2.வட மேற்கு ஆப்கானிஸ்தான்.
3.வடக்கு சீனா நேபாளம் பூடான்
4.கிழக்கு வங்காளதேசம் மியான்மர்
5.தெற்கு. இலங்கை மாலத்தீவு

**20.இந்திய திட்டநேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக?**

1 இந்தியாவின் மத்திய தீர்க்கரேகையான 82"30 கிழக்கு தீர்க்க ரேகையின் தலநேரம் இந்தியத் திட்டநேரமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.
2. இது "மிர்சாபூர்" வழியாக செல்கிறது.
3.இந்திய திட்டநேரம் கிரீன்வீச்சை விட 5மணி 30 நிமிடம் முன்னதாக உள்ளது

**21.இலட்சத்தீவு கூட்டங்கள் பற்றி விவரி?**

1 இந்தியாவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது. முருகைப் பாறைகளால் ஆனது.
2. இத்தீவுகள் 32 சதுர கி.மீ பரப்பளவு கொண்டது

22.**காலநிலையை பாதிக்கும் காரணிகள் பட்டியலிடுக?**

1அட்சம் பரவல் 2.கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு
3.கடல் மட்டத்திலிருந்து உயரம்
4.பருவக்காற்று 5.நிலத்தோற்றம்

**23.இந்தியாவின் நான்கு பருவ காலங்களைக் குறிப்பிடுக.**

| | |
|---|---|
| 1 குளிர்காலம். | ஜனவரி, பிப்ரவர |
| 2.கோடைக்காலம். | மார்ச், மே. |
| 3.தென்மேற்கு பருவக்காற்று காலம் | ஜூன், செப்டம்பர் |
| 4.வடகிழக்கு பருவக்காற்று காலம் | . அக்டே பர் டிசம் ர் |

**24.அதிக மழை பெறும் பகுதிகளை குறிப்பிடுக?**

1மேற்கு கடற்கரை 2அசாம் 3.மேகலாயாவி தென்பகுதி
4.திரிபுரா 5.நாகலாந்து 6.அருணாச் லப்பிரதேசம்

25 **அரசியலமைப்பு என்றால் என்ன?**

1 ஒரு நாட்டின் நிர்வாகம் சார்ந் அடிப்படை கொள்கைகளை பிரதிபலிக்கும் சட்டமே அரசியல் அமைப்பு ஆகும்
2 ஒரு நாட்டின் முன்னேற்றத்தின் "**அச்சாணி** " என்பர்

26.**இந்திய குடியரசுத்தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப் படுகிறார்?**

இந்திய குடியரசு தலைவர் "**ஒற்றை மாற்று வாக்கு மூலம்**" விகிதாசார பிரதிநிதித்துவத்தின் படி, வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்
2.குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்

**27.உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?**

1. இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்.
2.5 ஆண்டுகள் உயர்நீதிமன்ற நீதிபதி பணி, 10 ஆண்டுகள் உயர் நீதிமன்றத்தில் வழக்குரைஞராக பணிபுரிந்திருத்தல் வேண்டும்.

28.**நாட்டு வருமானம் வரையறு?**

ஒரு நாட்டில் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட. பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு ஆகும்

## பகுதி இ.

**எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 42 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.. 10*5 =50**

**29. கோடிட்ட இடங்களை நிரப்புக**

அ. **1894** ஆம்ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாக போரிட்டது
ஆவியட்நாம் தேசியவாதிகள் கட்சி **1927** நிறுவப்பட்டது.
இ. .முதன் முதலில் அரசியல் அமைப்பு எனும் கொள்கை **அமெரிக்க ஐக்கிய நாடுகளில்** தோன்றியது.
ஈ. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கெ ள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு **நவம்பர் 26, 1949**.
உ இந்தியாவில் **வேளாண்மை** துறை முதன்மை துறையாகும்.

30.**ஜெர்மனியுடன் தொ ர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை முக்கிய சரத்துக்களை குறிப்பிடுக?**

1.போரைத் தெ டங் ிய குற்றத்தை செய்தது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.
2.ஜெர்ம ி பை யில் பத்தாயிரம் வீரர்கள் கொண்டதாக சுருக்கப்பட் து
3ஆஸ்திர யா ஜெர்மனி ஒருங்கிணைப்பு தடைசெய்யப்பட்டது.
4.ே ாலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது.
ஜெர்மனியின் காலனிநாடுகளின் உரிமையை நசநாடுகள் பெற்றது.
6. அல்சேஸ் ,லோரைன் பகுதிகள் பிரான்சுக்கு திருப்பி தரப்பட்டது.

31.**பன்னாட்டு சங்கத்தின் பணிகளை மதிப்பீடுக?**

1 1920 1925 ஆகிய ஆண்டுகளுக்கு இடையே பன்னாட்டு சங்கம் பலசிக்கல்கள் தீர்த்து வைக்க அழைக்கப்பட்டது.
2.1920 இல் ஆலேண்டு தீவுகள் பிரச்சனையை தீர்த்து அத்தீவு பின்லாந்திற்கு உரியது என்று தீர்ப்பளித்தது.
3.1921 இல் போலந்து, ஜெர்மனி எல்லைப் பிரச்சனையை தீர்த்தது.
4.1925ல் கிரீஸ்,பல்கேரியாவின் மீது படையெடுத்தபோது பன்னாட்டு சங்கம் போர்நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது.
5.1925ல் லொக்கார்னோ உடன்படிக்கை படி ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம் இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் மேற்கு ஐரோப்பாவில் பரஸ்பரம் அமைதிக்கு உத்தரவாதம் அளித்தது
6.ஜெர்மனி பன்னாட்டு சங்கத்தில் இணைந்தது. பாதுகாப்பு குழுவில் நிரந்தர இடம் அளிக்கப்பட்டது.

32.வேறுபடுத்துக

| **அ. இமயமலை ஆறுகள்** | **தீபகற்ப ஆறுகள்** |
|---|---|
| வட இந்தியாவில் பாய்கிறது, சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா | தென்இந்தியாவில் பாய்கிறது, கோதாவரி, கிருஷ்ணா காவிரி |

| | |
|---|---|
| இமயமலையில் உற்பத்தியாகிறது. **வற்றாத** நதிகள் | மேற்குதொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது **வற்றும்** நதிகள் |
| **ஆ. வானிலை** | **காலநிலை** |
| ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள வளிமண்டலத்தின் தன்மையை குறிப்பதாகும். தினமும் மாறும் | ஒரு பகுதியின் நீண்ட கால வானிலை சராசரியை குறிப்பதாகும், மாறாதது |
| 24 மணி நேரத்தின் பதிவுகள் | 30 முதல் 35 வருட வானிலை பதிவுகள், |

**இ. காரணம் கூறுக . மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை**.

புவிப்பரப்பில் இருந்து உயரே செல்லச் செல்ல வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீ உயரத்திற்கும், 6.50"C வெப்பநிலை குறைவதால், மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிராக இருக்கும். .

**33.இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி**?

**இமயமலையின் உட்பிரிவுகள்** :

1.**ட்ரான்ஸ் இமயமலை** : ட்ரான்ஸ் இமயமலைகள் "ஜம்மு காஷ்மீர் மற்றும் திபெத் பீடபூமியில் அமைந்துள்ளது இங்குள்ள முக்கியமான மலைத்தொடர்கள் ஜாஸ்கர், லடாக் மற்றும் காரகோரம் ஆகும்

2.**இமயமலைகள்** : இமயமலைகள் ஒரு இளம்மடிப்பு மலைகள். இவை மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது

அ **பெரியஇமயமலையில்** குறைவான மழைபெறுகின்றது. இங்கு உயர்ந்த சிகரங்கள் எவரஸ்ட், கஞ்சன் ஜங்கா .

ஆ. **சிறிய இமயமலையில்** புகழ்பெற்ற கோடை வாழிடங்கள் சிம்லா, நைனிடால், முசௌரி, டார்ஜிலிங் .

இ.**வெளி இமயமலையின்** கிழக்குப் பகுதி டூயர்ஸ் எனவும் மேற்பகுதி டூன்கள் எனவும் அழைப்பர்.

3.**கிழக்கு இமயமலை** : இவை இமயமலை கிழக்கு கிளையாகும். வடகிழக்கு மாநிலங்களில் பரவியுள்ளது

**முக்கியத்துவம்** :

1.தென்மேற்கு பருவக்காற்றை தடுத்து வட இந்திய பகுதிக்கு கனமழையை கொடுக்கிறது

2.இந்தியத் துணைக் கண்டத்திற்கு இயற்கை அரணாகவும், வற்றாத நதிகளின் பிறப்பிடமாகவும் அமைந்துள்ளது 3.சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாக திகழ்கிறது. பல கோடை வாழிடங்கள், புனிதத் தலங்கள் உள்ளது 4.வனப்பொருட்கள் சார்ந்த தொழிலுக்கு மூலப்பொருட்கள் அளிக்கிறது. .

5.மத்தியஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர்காற்றை தடுத்து இந்தியாவை குளிரிலிருந்து பாத்காக்கிறது.

6.பல்லுயிர் மண்டலத்திற்கு பெயர் பெற்றவை.

**34.தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக**?

1.இந்திய காலநிலையின் முக்கிய அம்சமாக தென்மேற்கு பருவகாற்று விளங்குகிறது. ஜூன் முதல் வாரம் தென் இந்தியாவிலும் இரண்டாவது வாரம் ஜூலை 15 இல் இந்திய பகுதிகளுக்கும் முன்னேறுகிறது

2. உலகளாவிய காலநிலை நிகழ்வான "**எல்நினோ**" தென்மேற்கு பருவகாற்று காலத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது இது இடி மின்னலுடன் கூடிய துவக்கம் "பருவமழை வெடிப்பு" என்பர்

3.தென்மேற்கு பருவக்காற்று இந்தியாவின் தென் முனையை அடையும் போது இரண்டு கிளைகளாக பிரிந்து ஒரு கிளை அரபிக் கடல் வழியாகவும் மற்றொரு கிளை வங்காள விரிகுடா வழியாகவும் வீசுகிறது.

4.**அரபிக்கடல் கிளை** : மேற்கு தொடர்ச்சி மலையின் மேற்குச் சரிவுகளில் பலத்த மழை பொழிை தருகிறது. இமய மலையால் தடுக்கப்பட்டு வட இந் ியா முழுவதும் கனமழை தோற்றுவிக்கிறது. இராஜஸ்த ன் மற்றும் வட இந்தியாவின் மேற்கு பகுதிக்கு மழை இல்லை.

5.**வங்காள விரிகுடா கிளை** : இவை வடகிழக்கு இந்தியா மற்றும் மியான்மை நே க்கி வீசுகிறது. மேகலாயாவில் உள்ள மௌசின் மில் மிக கனமழை தருகிறது.

6இந்தியாவின் ஒட்டுமொத்த மழைப்பொழிவு 75% தருகிறது தமிழ்நாடு மலை றைவு பகுதியில் அமைந்துள்ளதால் குறைவான ம ழையைப் பெறுகிறது.

**35.இ திய அரசியலமைப்பின் சிறப்புக்கூறுகள் விளக்குக**?

உலகிலுள்ள எழுதப்பட்ட அனைத்து அரசியல் அமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.

2. பெரும்பாலான கருத்துக்கள் பல்வேறு நாடுகளின் அரசியல் அமைப்புகளில் இருந்து பெறப்பட்டவை.

3.நெகிழும் தன்மை, நெகிழாத் தன்மை கொண்டது

4..கூட்டாட்சி முறை அரசாங்கத்தை. ஏற்படுத்துகிறது .

5..இந்தியாவை சமயசார்பற்ற நாடாக்குகிறது

6.சுதந்திரமான நீதித் துறையை வழங்குகிறது .

7.உலகளாவிய வயதுவந்தோர் வாக்குரிமை அறிமுகப்படுத்தி 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்தவித பாகுபாடுமின்றி வாக்குரிமை வழங்குகிறது

**36.அடிப்படை உரிமைகளை குறிப்பிடுக**?

இந்தியஅரசியலமைப்பு சட்டம் பகுதி 12 முதல் 35 வரை சட்டப்பிரிவுகள் அடிப்படை உரிமை பற்றிக் கூறுகிறது.

1.**சமத்துவ உரிமை பிரிவு** 14-18 :சட்டத்தின் முன் அனைவரும் சமம், மதம், இனம், சாதி பாலினம் அடிப்படையில் பாகுபடுத்துவதை தடைசெய்தல்.வேலை. . வாய்ப்புகளில் சம வாய்ப்பு தீண்டாமை ஒழித்தல்.

2.**சுதந்திர உரிமை பிரிவு** 19- 22 : பேச்சுரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் உரிமை. குற்றவாளிகள் பாதுகாப்புப் பெறும் உரிமை,

தனிப்பட்ட சுதந்திரத்திற்கு பாதுகாப்பு பெறும் உரிமை, தொடக்க கல்வி பெறும் உரிமை
3.**சுரண்டலுக்கு எதிரான உரிமை பிரிவு 23 - 24** : கட்டாய வேலை, கொத்தடிமை முறை, மனிதத்தன்மையற்ற வியாபாரத்தை தடுத்தல் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு
4.**சமயச் சார்பு உரிமை பிரிவு 25 - 28** : எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும் பரப்பவும் நிர்வகிக்கும் உரிமை மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு அறிவுரை நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமல் இருக்க உரிமை.
5.**கல்வி கலாச்சார உரிமை பிரிவு 29- 30** :
சிறுபான்மையுனரின் மொழி, கலாச்சார பாதுகாப்பு கல்வி நிறுவனங்களை நிறுவி நிர்வகிக்கும் உரிமை
6.**அரசியலமைப்புக்கு உட்பட்ட தீர்வு காணும் உரிமை பிரிவு 32** தனிப்பட்டவரின் அடிப்படைஉரிமை பாதிக்கும் போது நீதிமன்றத்தை அணுகி உரிமை பெறுதல்

**37.இந்திய குடியரசுத் தலைவரின் சட்டமன்ற மற்றும் நீதி அதிகாரங்கள் விவரி?**
**சட்டமன்ற அதிகாரங்கள்** :
1.பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை குடியரசுத் தலைவர் உரையாற்றி துவக்கி வைக்கிறார்.
2.ஒவ்வொரு ஆண்டிலும் நாடாளுமன்றத்தின் முதல் கூட்டம் இவருடைய உரையுடன் துவங்குகிறது.
3.குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னரே அனைத்து மசோதாக்களும் சட்டமாகின்றது.
நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும், ஏதேனும் ஒரு அவையின் கூட்டத்தையோ குடியரசுத் தலைவர் முடிவுக்குக் கொண்டுவரலாம்.
5.மக்களவையின் ஐந்து ஆண்டு பதவிக்காலம் முடியும் முன்னரே அதனை கலைக்கும் அதிக ரம் உண்டு..
6.கலை, இலக்கியம் அறிவியல் விளையாட்டு சமூகப்பணி ஆகிய துறையில் சிறந்து விளங்கும் 12 நபர்களை மாநிலங்களவைக்கு நியமிக்கிறார்.
7.ஆங்கிலோ இந்தியர் சமூகத்தைச் சேர்ந்த இரண்டு நபர்களை மக்களை யில் பாதுமான பிரதிநிதித்துவம் இல்லை என்று கருதும் பட்சத்தில் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.
**நீதி அதிகாரங்கள்** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 72 வது சட்டப்பிரிவு நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவரின் தண்டனையை குறைக்கவும், ஒத்திவைக்கவும், தண்டனையிலிருந்து விடுவிக்கவும், மன்னிப்பு வழங்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

38.**இந்திய உச்சநீதிமன்றத்தின் நீதிவரையறைகள் ஏதேனும் மூன்றினை விளக்குக**?.
இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலனாக நீதிமன்றம் ஆகும் குடி மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் நீதித்துறை முக்கிய பங்கு வகிக்கிறது
1.**தனக்கே உரிய நீதி வரையறை** :
அ. உச்சநீதிமன்றத்திற்கு நேரடியாக வரும் வழக்குகள் தனக்கேயுரிய நீதி வரையறைகளுக்கு உட்பட்டவை அவைகள்
ஆ. ஒரு மாநிலம் அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள் .
இ. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள்
ஈ. அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எழும் சிக்கல்கள்.
2.**மேல்முறையீட்டு நீதிவரையறை :**
i உச்சநீதிமன்றம் நாட்டில் இறுதியில் மேல்முறையீட்டு நீதிமன்றம் ஆகும்.
ஈ. மாநில உயர்நீதி மன்றங்கள், உரிமையியல். குற்றவியல் அரசிலமைப்பு வழக்குகள் மீதான தீர்ப்புக்கு எதிரான மே ல்முறையீட்டு வழக்குகளை உச்ச நீதிமன்றம்விச ரிக்கின்றது
3.**ஆலோசனை நீதிவரையறை :** பொது முக்கியத்துவம் வாய்ந்த எந்த ஒரு சட்டம் மீது உச்ச நீதிமன்றத்தின் கருத்தினை பற அரசியலமைப்புச் சட்டம் குடியரசு தலைவருக்கு அதிகாரம் வழங்குகிறது.

**39.நாட்டு வருமானம் கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி?**
**1 மொத்த நாட்டு உற்பத்தி** நாட்டு மக்களால் ஓர். ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், பணிகளின் மதிப்பு
2.**மொத்த உள்நாட்டு உற்பத்தி** : ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் பணிகளின் மொத்த மதிப்பு ஆகும்
3.**நிகர நாட்டு உற்பத்தி** : மொத்த நாட்டு உற்பத்தியில் இருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கியபின் கிடைக்கும் பணம் மதிப்பு ஆகும்
4.**நிகரஉள்நாட்டு உற்பத்தி** : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து தேய்மானத்தை கழித்த பின் கிடைப்பது ஆகும்.
5.**தலா வருமானம்** : நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் கிடைக்கிறது
6.**தனிப்பட்ட வருமானம்** : வரிவிதிப்பதற்கு முன் தனிநபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானம் ஆகும்.
7.**செலவிட தகுதியான வருமானம்** : தனிநபர்கள் மற்றும் குடும்பங்களில் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவு செலவிடப்படுகின்ற வருமானமாகும்.

**40..GDP கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி?**

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டம், பணிகளின் அங்காடி மதிப்பே "இந்தியாவின் GDP என அழைப்பர்

1.**செலவின முறை** : மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதி பண்டம் பணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளில் கூட்டுத்தொகை ஆகும்

2.**வருமான முறை** பண்டங்கள் பணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தை கணக்கிட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை கூறுவதாகும்.

3.**மதிப்பு கூட்டு முறை** : மதிப்புக்கூட்டு முறை என்பது அனைத்து இடைநிலை பண்டங்களின் மதிப்பை கூட்டி உற்பத்தி செய்யப்பட்ட இறுதி பண்டங்களின் மொத்த மதிப்பை கணக்கிடுவது ஆகும் மதிப்புக்கூட்டு முறை = டீத்தூள் +. பால் + சர்க்கரை =. தேனீர்

**41.காலக்கோடு வரைக உலக வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் 1920 முதல் 1940 வரை**

1. 1920–பன்னாட்டு சங்கம் தோற்றம்.
2. 1929–பொருளாதாரப் பெருமந்தம்
3. 1934–நீண்ட பயணம்.
4. 1938–மியூனிச் உடன்படிக்கை.
5. 1939 – இரண்டாம் உலகப் போர் தொடக்கம்.
6. 1940–பிரிட்டன் போர்

**42.உலக வரைபடத்தில் குறிக்கவும்**

அ. கிரேட் பிரிட்டன் ஆ. ஜெர்மனி இ. பிரான்ஸ்.
ஈ ஜப்பான் உ. துருக்கி

## பகுதி - ஈ.

**அனைத்து வினாக்களுக்கும் விடையள 2*8 = 16**

43அ)**முதல் உலகப் போருக்கான முக்கிய கா ணங்கள் விவாதி**?

1 **ஐரோப்பிய நாடுகள் அணி சேர்க்கைகள்**
ஒரு முகாம் மைய நாடுகள் ஜெர் னி ஆஸ்திரியா ஹங்கேரி ஆகியவை இருந்தது.. இ கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவர் கூட்டு நாடுகள் உருவாக்கப்பட்டது .

2.**வன்முறை சார்ந்த தேசியம்** :
இங்கிலாந்து ஆரவாரமான நாட்டுப்பற்று,
பிரான்ஸ் வெறிகொண்ட நாட்டுப்பற்று,
ஜெர்மனி, அதிதீவிர நாட்டுப்பற்று

3.**ஜெர்மனி ஆக்கிரமிப்பு கொள்கை** :
ஜெர்மனி பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம் ஆக்கிரமிப்பு மனப்பான்மை கொண்டவர். "ஜெர்மனியே உலகத்தின் தலைவன்" என்றார்

4.**பிரான்ஸ் ஜெர்மனி பகை** :
1871 ல் பிரான்ஸ் தனது அல்சேஸ், லோரைன் பகுதிகளை ஜெர்மனியிடம் இழந்தது. மொராக்கோ விவகாரத்தில் பிரான்சுக்கு எதிராக ஜெர்மனி தலையிட்டது.

5.**பால்கன் போர்** :
முதல், இரண்டாம் பால்கன் போரில் துருக்கி தோற்கடிக்கப்பட்டு அதன் பேரரசு சுருங்கியது. துருக்கி, பல்கேரியா தோற்றது.

6.**உடனடிக் காரணம்** : ஆஸ்திரிய ஹங்கேரி பேரரசின் மகன் பிரான்ஸ் பெர்டினாண்டு ஒரு செர்பியனால் கொல்லப்பட்டதே முதல் உலகப்போருக்கு முக்கிய காரணமாகும்

ஆ) **நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் செயல்பாடுகளை திறனாய்வு செய்க**?

**அதிகாரங்கள்** :1..நாடாளுமன்றம் குடியரசுத் தலைவர் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்கவும், உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்ற நீதிபதிகள் தலைமை தேர்தல் ஆணையர், இந்திய தலைமை கணக்குத் தணிக்கையாளர் ஆகியோரை அரசியலமைப்பு சட்ட விதிமுறைகள் படி பதவி நீக்கம் செய்யவும் அதிகாரம். பெற்றுள்ளது

2..மாநிலங்களின் எல்லைகளை ம ற்றி அமைத்திட நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் ண்டு

**செயல்பாடுகள்** :3 நடுவன் அரச ன் சட்டம் இயற்றும் அங்கமாக நாடாளுமன் ம் த கழ்கிறது.

4 .இந்திய நாடாளுமன்றம் சட்டம் இயற்றுதல், நிர்வாகத்தி மேற்பார்வையிடுதல், வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றுதல் பொதுமக்கள் குறைகள் போக்குதல் என பல பணி செய் றது.

5.மேலும் வ ர்ச்சி திட்டங்கள், சர்வதேச உறவுகள், உள்நாட்டு கொள்கைகள் போன்றவைகளை விவாதித்தல் என பல பணிகளை செய்கிறது.

**44 அ) இந்திய வரைபடத்தில் குறிக்கவும்**

அ) i ஆரவல்லி மலை. ii கங்கை
iii மேற்குத்தொடர்ச்சி மலைகள். iv தக்காண பீடபூமி
v. தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை.
vi k2 சிகரம் vii காரகோரம் viii மன்னார்வளைகுடா.

**அல்லது**

**ஆ)** i சென்னை ii மும்பை iii புலிக்காட் ஏரி. iv.நர்மதை
v அந்தமான் நிக்கோபார் தீவுகள் vi தார்பாலைவனம்
vii டெல்லி பன்னாட்டு விமான நிலையம் viii பாக்நீர்ச்சந்தி